www.tamilarangam.net

குமுறல் 5
அனல் 2
1989

# எரிமலை

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE

# வெளியேறு!

இன்னுமா போதவில்லை..?

எங்கள் அழகியதேசத்தை
உனது அமைதிப்புயல்
சேதப்படுத்தியதுபோதும்

எங்கள் எதிர்காலங்களை
உனது சமாதானப்பணி
அனாதைகள் ஆக்கியது போதும்

வெளியேறிவிடு தயவுசெய்து
இல்லையேல் வெளியேற்றப்படுவாய்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மதி

மீண்டும் ஒரு முறை
தமிழீழத்தை
சோகப்புயல் சேதப்படுத்திவிட்டது
அந்நியப் புயலினால் ஆலமரமொன்று
அடிசாய்ந்துவிட்டது
பனைக்கூடல்களுக்குள் புகுந்தும்
வயல் வெளிகளுக்குள் தவழ்ந்தும்
வீசும் காற்றே! மெல்ல வீசு
இந்தப் புலிவீரனின் பெயரை
போகுமிடமெல்லாம் கூவு

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து

விடுதலைப்புலிகள்–சிறீலங்கா அரசுக்கிடையேயான பேச்சு வார்த்தைகள், அதைத்தொடர்ந்து இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் என்ற சிறீலங்கா அரசின் கட்டளை, அவசர அவசரமாக அதனை மறுத்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் வரை இந்தியப் படைகள் வெளியேறப் போவதில்லை, அத்துடன் இந்தியப் படைகளின் வெளியேற்றம் இரு நாடுகளின் பேச்சுவார்த்தைகளின் ஊடு எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும் என பாரத பிரதமர் ராஜீவ் காந்தி சிறீலங்கா ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் இந்தியப் படையினர் தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கும் வளமான வாழ்விற்கும் வழி வகுக்கும் பொருட்டே இங்கு நிலை கொண்டிருக்கின்றார்கள் அதனை இந்தியப் படை வெளியேறக் கூடாது என இந்தியஅரசின் கட்டளைக் கிணங்க அதன் தமிழ்க் கைக் கூலிகளான (EPRLF, ENDLF, TELO, TULF போன்ற சமூக விரோதக் குழுக்கள் அறிக்கைகள் வாயிலாக அழுது தீர்த்திருக்கின்றார்கள்.

இந்திய அரசிற்கும்–தமிழீழ மக்களிற்கும் இடையிலான இச் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியவர்களில் ஒருவரான சிறீலங்காவிற்கான முன்னாள் இந்தியத் தூதுவர் "தீக்சித்" தனது பிரியாவிடையின் போது "தமிழர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்காகத்தான் இந்தியப்படைகள் சிறீலங்காவிற்குள் நுழைந்தது." என குறிப்பிட்டுப் பேசியதிலிருந்து இந்திய அரசின் உண்மை நிலைப்பாட்டை பிரதிபலித்திருந்தார்.

அதையும் மிஞ்சும் விதத்தில் "தமிழீழம் உருவாகாது தடுப்பதற்காக தமது படை பல தியாகங்களைச் செய்துள்ளது" என விடுதலைப் புலிகள்–சிறீலங்கா அரசுக்கிடையேயான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின் சிறீலங்காவில் உள்ள இந்தியத்தூதராலயம் அறிக்கை விடுத்துள்ளது. (இவ் வறிக்கை வாயிலாக இந்திய அரசு தம்மைப் பாதிக்கும் எந்த விதமுடிவுகளையும் பேச்சு வார்த்தையின் போது சிறீலங்கா எடுத்துவிடக் கூடாதென்பதற்காக தமது பணி பற்றி சிறீலங்காவிற்கு ஞாபகம் ஊட்டியுள்ளது.)

www.tamilarangam.net



ஆனல் தமிழீழத்தில் தவறுதலாகப் பிறப்பெடுத்த நம் தேசத்துத் துரோகிகள் தான் இந்தியா அளப்பரிய தியாகங்களுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்காக சேவை யாற்றுகின்றது என பிதற்றிக் கொள்கின்றார்கள்.

ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ மக்களைக் கொன்று குவித்தும் பல நூறு பெண்களை மானபங்கப் படுத்தியும், எண்ணுக்கணக்கற்ற தமிழீழ மழலைகளை அனைகள் ஆக்கியும் அனர்த்தங்கள் புரிந்த இந்திய ஆக்கிரமிப்புஇராணுவம் துரோகிகளின் பார்வையில் தியாகிகளாய்த் தெரிவதில் ஆச்சரியப்பட எதுவும்இல்லை

தனது பிராந்திய நலனை பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ மக்களினதும் வீரம் மிக்க போராளிகளினதும் அளப்பரிய தியாகங்களை பகடைக்காய்களாக்கி தமது அரசியல் சதுரங்க விளையாட்டை ஆரம்பித்த இந்திய அரசிற்கு ,அரசியல் தேவைகருதி விடுதலை புலிகளினல் எடுக்கப்பட்ட சிறீலங்கா அரசுடனை நேரடிப் (இந்தியத் தரகர் அற்ற நிலையில்) பேச்சு வார்த்தை என்ற புத்தி சாதுரியமான அரசியல்நகர்வு மிகப்பெரும் பேரிடியைக் கொடுத்திருக்கின்றது.

தற்போதைய விடுதலைப் புலிகளின் அரசியல் நகர்வு மிகப்பெரிய ராஜதந்திர நோக்கம் கொண்டது என சர்வதேச பத்திரிகைகள் பல கருத்து வெளியிட்டுள்ளன.

சீன மீதான யப்பானிய ஆக்கிரமிப்பின் போது சியாங்சே தலைமையிலான பிற்போக்கு அரசியல் சக்தியும், புரட்சிகர செஞ் சீனத்தை உருவாக்கிய அதன் சிற்பி மாவோ தலைமையிலான புரட்சிகர சக்தியும் கரம் கோர்த்து அன்னிய ஆக்கிரமிப்படையை விரட்டியடித்தன. அதன் பின் சியாங்சே தலைமையிலான பிற்போக்கு சக்தி அழிக்கப்பட்டு புரட்சிகரச் செஞ் சீனம் மாவோ தலைமையில் மணம் வீசியது. இது புரட்சிகர செஞ் சீன வரலாற்றில் தவிர்க்க முடியாத அரசியல் நகர்வு.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்கைப் புரிந்து கொள்ளாதவர்களும், புரிந்து கொள்ள மறுப்பவர்களும், புரிந்தும் புரியாததுபோல் நடிப்பவர்களும் தங்கள் கைவசம் உள்ள புரட்சிகர தேசங்களின் வரலாற்றுப் புத்தகங்களைக் கொஞ்சம் தூசி தட்டிப் படித்துக் கொள்ளட்டும்.

www.tamilarangam.net


தற்போதைய சூழ்நிலைகளை உண்மைக்குப் புறம்பான முறையில் திரித்துக் கூறி, விடுதலைப் போராட்டத்தின் உண்மையான திசையை மாற்றிக் காட்டி மக்களைக் குழப்பி, மக்களின் முன்வர சில முகமூடிகள் தயாராகி யிருக்கின்றனர்.

அதே வேளை அந்த முகமூடி மனிதர்களின் முகத்திரையை விலக்கி அவர்களின் அழகு முகங்களைக் காணும் ஆவலில் மக்களும் தயாராக இருக்கின்றார்கள்.

-ஆசிரியர் குழு-

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

# நூல் நிலையம்

அரசியல், சமூக, சமுதாய, கலை, கலாச்சார இலக்கிய துறைகள் சார்ந்த 1500 க்கும் மேற்பட்ட நூல்களுடன் கூடிய நூல்நிலையமும், தமிழீழ, தமிழக, தினசரிகளுடன் கூடிய வாசிகசாலையும் தினமும் மாலை 2 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

------******-------******------

341, RUE DES PYRENEES,
75020 PARIS.
TEL: 43 58 11 42

M° : JOURDAIN
BUS : 26 (L'ERMITAGE)

------******-------******------

www.tamilarangam.net



# பேச்சுவார்த்தை ஒரு பார்வை

இன்று கொழும்பில் இடம்பெறும் தமிழீழவிடுதலைப் புலிகள்—சிறீலங்கா அரசு என்பவற்றிற்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் ஒரு புதிய வடிவத்தை நோக்கி தமிழீழ போர்ச்சூழ்நிலைகளை நகர்த்திச் செல்கின்றது.

ஆயுதம் தரித்த—சீருடை தரித்த—எதுவித விட்டுக் கொடுப்புகளும் அற்ற விடுதலைப்புலிகள் குழுவிற்கும் சிறீலங்கா ஜனாதிபதி, அமைச்சர்கள், அமைச்சின்செயலாளர்கள் அடங்கியகுழுவிற்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் கண்ட மிகப்பெரிய வெற்றி இந்திய ஏகாதிபத்திய தலையீட்டுக் கொள்கையை தோல்விகாணவைத்ததே. எப்போதும் இலங்கைத்தீவின் இனப்பிரச்சனையில் மத்தியஸ்த இராஜதந்திரத்தை கடைப்பிடித்த இந்திய அரசு தனதுநோக்கம் அதாவது இலங்கைத்தீவின் மீதான ஆளுமை நிலைநாட்டப்பட்டவுடன் தனது சுய தோற்றத்தை காட்டி படுகொலைகளை "சமாதானம்!" என கூறிக்கொண்டது தொடர்ந்தும் மத்தியஸ்தராகவும் காட்டிக்கொண்டது.
இந்நிலையில் விடுதலைப்புலிகள் முன்வைத்த பேச்சுவாத்தை நோக்கிய முதலடி இந்தியகொள்கைவகுப்பாளர்களைவிழிபிதுங்கவைத்துள்ளது. இப்பேச்சுவார்த்தையின் பிறிதொரு சிறப்பம்சம் கொழும்பில் ஆயுதம்தரித்த விடுதலைப்புலிகள் தமிழீழம் என்ற அரசியல் இலட்சியத்தை இம்மியளவும் விட்டுக்கொடுக்காது பேச்சுவார்த்தை மேசைக்கு சென்றுள்ளமையே.

இதன்மூலம்ஆயுதப் போராட்டம் ஒரு அரசியல் அந்தஸ்த்தை சந்தித்துள்ளதுடன் ஒரு உறுதிவாய்ந்த தேசியவிடுதலை இயக்கம் தனது பாதையில் கண்ட சிறப்புமிக்க வெற்றியாகும்.

இப்பேச்சுக்கள்

1) சிங்கள மக்களின் இந்திய படைகள் மீதான எதிர்ப்புணர்வை நெறிப்படுத்துவதை நோக்கி

2) இந்திய மக்கள் தமது அரசின் சமாதான வேடம்ஆக்கிரமிப்பைத்தான் காட்டுகின்றது என்பதைக்கண்டு ஒரு எதிர்ப்புணர்வை உருவாக்குவதை நோக்கி

www.tamilarangam.net



3) சர்வதேச சமூகம் இந்தியப்படைகளின் "சமாதானப்பணி" முடிக்கப்பட வேண்டும் என்பதை உறுதியாக தெரிவிக்ககோருவதை நோக்கி

4) தமிழீழமக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் சர்வதேச மயப்படுவதை நோக்கி

நடாத்தப்படுகின்றது.

தற்போது இந்தியப்படைகள் வெளியேறுவது தொடர்பாக சிறீலங்கா நாட்குறித்துவிட்டது.
இந்தியா வெளியேறமுடியாது என "சண்டித்தனம்" காட்டிவிட்டது.

தமிழீழமக்களுக்கு ஒரு வெற்றி ஏகாதிபத்திய எதிப்புப்போர் பல திசைகளிலும் கூர்மை பெறுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைகள் இந்திய-சிறீலங்கா உறவைத் தீர்மானிக்கும் ஒரு அந்தஸ்த்தை அடைந்துள்ளது..
விடுதலைப்புலிகள் பேசுவதற்கு இந்தியப்படைகளின் வெளியேற்றமே ஒரு முக்கிய விடயமாக இனம் காட்டியுள்ளனர்.
இப்பேச்சுவார்த்தையிலை கிலி கொண்ட இந்திய அரசு

1) தனது படை பெரும் தியாகம் செய்து தமிழீழம் உருவாகாது தடுத்ததாக சிறீலங்கா அரசிடம் அழுதுகொள்கின்றது.

2) தனது கொட்டடியில் புல்லுப்போட்டு வளர்க்கும் பிராணிகளிடம் (EPRLF, ENDLF TELO, TULF ) குரைக்குமாறு உத்தரவிடுகின்றது.

3) "தமிழர் நலன்கள்" பற்றி 2வருடங்களின் பின்னர் மீண்டும் நீலிக்கண்ணீர் வடிக்கத் தொடங்குகின்றது.

ஆக, இப்பேச்சுவார்த்தைகள் சரியான திசையூடு செலுத்தப்பட்ட ஒரு ஆயுதமாக்கப்பட்டுள்ளது..

-மோகன்-


## தொலைபேசி செய்தித் தொகுப்பு

*ஈழத்துப் போர்க்களத்தில் - இந்திய-சிறீலங்கா அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் பற்றிய தினசரி செய்திகள் மற்றும் குறிப்புகளைக் கொண்ட தினசரி செய்திச் சேவை,*
*இல, 46364949*

www.tamilarangam.net



# அர்ப்பணிக்கப்பட்ட மில்லர்

கரும் புலிகள் (Black Tigers) என்பது தற்கொலைப் பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக எம் இயக்கத்தில் கொள்ளப்பட்டது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருமே தம்முடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்கு எப்போதும் தயாராக இருந்தனர். இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப்படைய விடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து அதைவிட தமது உயிரைக் கொடுத்து சில நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். அரிதாக மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்ப்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும்போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத் தயாராகவே இருப்பர். இப்படியாக எமது இயக்கத்தில் தற்கொலைத் தாக்குதலில் முதல் புலியான மில்லரைப் பற்றி சற்றுப் பார்ப்போம்.

மில்லர் வடமராட்சியின் தும்பளைப் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவன். அவனுடைய தந்தை இலங்கை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க இராணுவத்தின் அடக்குமுறைக்கெதிராகப் போரிடத் தன்னுயிரைக் கொடுக்க அவன் எப்போதும் சித்தமாக இருந்தான். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத்துடன் மோதியிருக்கிறான். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பைப் பெற்றவன்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டபோது பிரபாவின் அணியினரோடு சேர்ந்து பதில்த் தாக்குதலில் ஈடுபட்டான். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்கு பின் இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதியை கைப்பற்றிக் கொண்டனர். வடமராட்சிப் பகுதியை திரும்ப மீட்கவேண்டும் என்பதில் மில்லர் துடியாய்த் துடித்தான்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார்ப் பிராந்தியத்தில் விக்டருடன் பணியாற்றியவன்)

www.tamilarangam.net



பிரபாவும், மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடிமருந்தையும் பெற்றுக்கொண்டனர். ஒன்றன்பின் ஒன்றாக இரு வண்டிகள் விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும் அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன் வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வண்டிகளை விடுவது என்றும், ஏனென்றால் இராணுவத்தினர் இரவு 10 மணிக்குப் பின்னர், முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கி விடுவார்கள் என்பதால், அதற்கு முன்னர் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்படல் வேண்டும். வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப்பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுப்பெடுத்துக்கொண்டான். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப்பட்டு முகாமுக்கு அண்மையில் கொண்டு வரப்பட்டு இருக்கும். சரியான நேரம் நெருங்கியதும் எம் தோழர்கள் முகாமைத் தம் முடைய துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில் கமலும் அவனுடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரம்பிய வாகனங்கள் முகாமைச் சென்றடையும். இது தான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவன். இவரது தந்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையரது பாதை எமது தாயகத்தை மீட்டெடுக்க சரியான தீர்வாகாது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு போராடத் தொடங்கினான். பயிற்சியை முடித்து விட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றியிருந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும்பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான். இவன் அங்கு பணியாற்றிய காலத்தில், ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டுக்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடு

www.tamilarangam.net



தலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து கமல் பணியாற்றியது கமலின்பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டுக்கு போகும் சமயங்களில் எல்லாம் அன்பாக உபசரித்து, கமலுக்கு ஆதரவளித்து, அன்பு

## விவேகம் வீண்போகாது; வீரம் மண்டியிடாது

செலுத்தினாள் நாட்கள் நகர நகர இருவரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனமார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். அப் பெண் கமலின் உயிர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒருபோதும் கமலின் தீவிரமான போராட்டத்துக்கு தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து கமல் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையிலே நெல்லியடி முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்ற முன் வந்தான். முதல் நாள் கமலும், திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான் கமல். ''நான் சில வேளை இத்தாக்குதலில் இறந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாகத் தெரிவித்து விடு.''

என்ன சத்தியமான வார்த்தைகள். ஏதோ தன் இறப்பைத் தானே அறிந்து வைத்திருந்தது போல் கூறியிருக்கின்றான். நான் கடந்த காலங்களில் நன்கு கவனித்திருக்கிறேன். எத்தனையோ தோழர்கள் தம்முடைய மரணத்துக்கு முன்னரே மிகத் தெளிவாகத் தம்முடைய மரணத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இன்றும் அவை எனக்கு வியப்புக்குரிய விடயங்களே.

தாக்குதல் நடவடிக்கைகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நெல்லியடிப் பகுதிச்கு வெடிமருந்துகளையும். வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாகக் கொண்டுவந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூடத் தான் அடுத்த நாள் இறக்கப்போகின்றேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்துகொள்ளவில்லை. கவலையோ, திகைப்போ அல்லது பயமோ, தயக்கமோ எதையுமே அவனிடத்தில் காண முடியவில்லை. வெடிமருந்துகளை ட்ரக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புகளைக் கொடுத்து தன்னுடைய சவப் பெட்டியைத் தானே தயாரித்துக் கொண்டிருந்தான். அன்று பகல் முழுவதும் வெடிமருந்துடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டுவரப்பட்டது. நேரம் இரவாகியபோது குழுக்கள் முகாமை நோக்கி முன்னேறத் தொடங்கியது. மில்லர் தன்னுடைய வாகனத்

www.tamilarangam.net



தில் ஏறி அமர்ந்துகொண்டான். கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்ல வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். ஏனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

மாத்தையாவிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எம்முடைய குழுக்கள் எல்லோரும் முகாமைநோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். மில்லர் ஏறி அமர்ந்திருந்து ட்ரக் வண்டியை ஸ்ராட் செய்து எஞ்சினை உறுமிவிட்டு அமைதிப்படுத்தினான். பின் தன் வண்டியை செலுத்துவதற்கான உத்தரவுக்காக காத்திருந்தான். அப்போதுகூட பக்கத்தில் இருந்த பிரபாவோடு ஏதோ ''ஜோக்'' அடித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கிப் பிரயோகம்செய்துகொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப்பட்டிருந்தன. தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்துவிட்டு விலகி மறைவில் படுத்துக்கொண்டான். வெடி மருந்து வெடித்தது அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப்பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப்பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெஷின் கன்கள் வெடிக்கத் தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கி டோக்கியில் அறிவித்தான் ''தடைகள் அகற்றப்பட்டுவிட்டது. ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரே உள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகின்றது. சற்றுப் பொறு.''

மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறிவிப்பு தெளிவாகக் கேட்டது. அதைக் கேட்ட மில்லர்,

''பிரபா பரவாயில்லை, வாகனத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காதபடி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டுபோய் சேர்த்துவிடுவேன்'' என்றான்.

''மில்லர் சற்றுப் பொறுத்துக் கொள். அந்த ''பங்கர்'' உடைக்கப்பட்டதும் நீ செல்லலாம். மிக விரைவாக வண்டியைச் செலுத்தி

வண்டியை விட்டுவிட்டு நீ இறங்கி ஓடி வந்துவிடு'' என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சிரித்துக் கொண்டான். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவுக்கு ஏனென்று கேட்க மனம் துணியவில்லை.

''பிரபா, முன்பு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் மிக நிதானமாகவே வாகனத்தை செலுத்துவேன்.

www.tamilarangam.net



எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தைக் கொண்டு செல்வேன்'' என்று கூறினான்.

கமல் தன்னுடைய குழுவில் (R.P.G.) ரொக்கட் லோஞ்சர் வைத்திருந்தவனை அந்த காப்பரனை உடைக்குமாறு கூற, ''ரொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட ரொக்கட் பங்கரைத் தாக்கியது. மணல் மூட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும், புகையும்......கமல் தகவலைத் தெரிவித்தான். மாத்தையாவிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவுக்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை ''ஸ்ராட்'' செய்து மெதுவாகச் செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான். வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடிமருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கிவிட்டது. மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து, வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து ''மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு'' என்று கூற அதை மில்லர் புரிந்துகொண்டதுபோல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். பிரபா வண்டியை பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும், வெடிமருந்தையும் சுமந்துகொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்த தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்துவிட்டு பின்னுக்கு செல்ல சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாமை நோக்கி முன்னேறினார்கள். இராணுவத்தினர் தங்கியிருந்த, சற்று முன்னர் கூட இராணுவத்தினர் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த மிகப்பெரிய மாடிக் கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத்தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்துபோனார்கள்.

மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரமரணமடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எம்மால் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர், வெடிமருந்தின் அதிர்வலைகளோடு சங்கமமாகி அதிர்வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தான்

— ச. கிட்டு.

www.tamilarangam.net



(தேர்தல் மேடை)

# மீறல்கள் பலவகை; அவற்றுள் ...

வடமராட்சி

கரணவாய் தாமோதரம் வித்தியாலயத்தில் ஒரு வாக்காளருக்கு 10 வாக்கு அட்டைகள்கொடுக்கப்பட்டு பயமுறுத்தி வாக்களிக்க வைக்கப்பட்டது.

உடுப்பிட்டி மெதடிஸ் பாடசாலையில் சுயேட்சைக் கட்சிப் பிரதிநிதி உள்ளே செல்ல ஈ.பி.ஆர்.எல்.எப் உடுப்பிட்டி பொறுப்பாளர் முரளி அனுமதிக்கவில்லை இங்கும் மோசடி நடந்தது.

மட்டக்களப்பு

கல்குடாவில் வாக்காளருக்கு வாக்காளர்அட்டைகள் தேவையில்லை என்றும், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஈ.பி.ஆர்.எல்.எப் இனர் தேர்தல் அதிகாரிகளை மிரட்டி கள்ள வாக்குகளை அளித்தனர். இங்கு வெளிநாடு சென்றோரினதும், இறந்தவர்களினதும் வாக்குகள் போடப்பட்டன.

வவுனியா

சேமமடுவில் இறந்தவர்களின் வாக்குகள் போடப்பட்டன. வல்லிபுரம், கந்தையா, சேதுராசா, நடராஜா ஆகியோரின் வாக்குகள் பெரியதம்பி, கந்தையா, சிவம், மகேந்திரன், மனோகரன் ஆகியோரால் போடப்பட்டது.

மகிழங்குள கிராமத்திலிருந்து 199வாக்குகள்விழுந்திருந்தன ஆனால் அங்கு யாரும் வாக்களிக்கவில்லை.


இலுப்பைங் குளம் முஸ்லீம் காங்கிரஸ்பிரதிநிதியான எஸ்.எஸ்.எம்.பாருக் ஈ.பி.ஆர்.எல்.எப் இனரால் தாக்கப்பட்டார்.

செட்டிக்குளம், முதலியார் குளம், சிப்பிக்குளம், கல்லாறு 7ம் கட்டை முதலிய பல கிராமங்கள் இ.இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு பலவந்தமாக வாக்களிக்கச் செய்யப்பட்டன.

(எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக தேர்தல்இப்படித்தான் நடந்தது)

www.tamilarangam.net






1989 ஜூன் 1 திகதி பாரிஸ்நகர வீதிகளிலே அணி வகுத்து நடைபயின்ற தமிழீழ தேசத்து மக்களின் பேரணி இது !.

நம் மக்கள் இவர்கள் !.நம் தேசத்தின்பால் நேசம் கொண்ட தமிழீழமக்கள் இவர்கள் !

ஆயுதமுனையிலே பலவந்தப்படுத்தி,, இழுத்து வரப்பட்டு அவர்களது சொந்த உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் இதில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

ஒவ்வொரு மக்களினதும் தேக்கிவைத்திருந்த உணர்வுகளின் வெளிப்பாடுகள்தான் இவை. நெஞ்சுக்குள்பூட்டிப் பூட்டி வைத்திருந்த வேதனைகளின் வடிகால்கள் தான் இவை !

தமிழீழதேசிய விடுதலைப் போராட்டத்தில்ஒவ்வொரு தனிமனிதனினதும் பங்களிப்பின் அதிமுக்கியத்துவத்தை கவனத்தில் கொண்ட மக்களின் உணர்ச்சிப் பெருங்கடல் பாரிஸ் நகரத்துத் தெருக்களை நனைக்கக!

www.tamilarangam.net




இவை வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சியல்ல! நம் தேசத்து யதார்த்த சூழ்நிலைகளை, நாம் அனுபவித்த கொடுமைகளை, நம் மக்கள் சந்திக்கின்ற அனர்த்தங்களை ஆக்ரோஷ வெளிப்பாடாய் அன்னிய தேசத்து மக்களுக்கு வெளிப்படுத்துவதுதான் இதன் நோக்கம்.

பிரான்சிய பலம் வாய்ந்த தொழிற்சங்கமான C.G.T என்ற அமைப்புடன், பாலஸ்தீன மக்கள் தென் ஆபிரிக்க கறுப்புஇன மக்கள், குறிடிஸ்தான் மக்கள் தென் அமெரிக்க, லத்தீன் அமெரிக்க ஒடுக்கப்பட்ட மக்கள் சகல துறைகளாலும் ஒடுக்கப்பட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த இம் மக்களின் எழுச்சிப்பிரவாகத்தில் தமிழீழ மக்களின் பேரணியும் சங்கமமாகியது!

PLACE DE LA NATION என்ற இடத்தில் இருந்து BASTILLE நோக்கிச் சென்ற இவ் ஊர்வலத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனினது பிரமாண்டமான உருவப்படம் காவிச் செல்லப்பட்டது. தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடி ஏந்திய மக்கள் வெள்ளம் அடக்குமுறையாளர்களுக்கு எதிராக கோசித்த வண்ணம் சென்றனர்.

* இதில் முக்கியமான ஒரு விடயத்தையும் பார்த்தாகவேண்டும்

இதோ.



www.tamilarangam.net



நம் பிஞ்சு மழலைகளின் அணிவகுப்பு இது! இவர்கள் எந்த பலாத்காரத்தின் கீழ் இப்படிக் கரம் கோர்த்தார்கள்..

அடக்குமுறை என்றால் என்னவென்றே தெரியாத இந்த இள மொட்டுக்களைப் பாருங்கள். இவர்களை உணர்வுள்ளவர்களாக, சொந்த மண்ணில் பற்றுள்ளவர்களாக வளர்க்கவேண்டும் என்று இவர்களது பெற்றோர்களுக்கு ஆசை.

* இந்த இளம் மொட்டுக்களுக்காகத்தான் போராட்டம்.
* இந்தச் சந்ததியின் சுதந்திர வாழ்விற்காகத் தான் இந்தப் போராட்டம்.
* இந்தச் சிறிசுகளின் முகங்கள் சிரித்தபடி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சுதந்திரப் போராட்டம்.

இதை தமிழீழ மண்ணிற்கு சொந்தமான சகல மக்களும் உணர வேண்டும்.. அதற்கொப்ப இனிவரும் காலங்களிலாவது அணிதிரளவேண்டும்.

---

உங்களுக்கு.....

எரிமலை பற்றிய உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங்கள், அரசியல்—சமூக, நேர்க்குள்ள ஆய்வுகள், சமூக பிரக்ஞை உள்ள சிறுகதைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கும், திருத்தத்திற்கும் உட்படும்.

ஆசிரியர் குழு.

---

பின் அட்டைப்படம்*

தனியொருவனைச் சென்று நெல்லியடி இராணுவ முகாமைத் தாக்கி நிர்மூலமாக்கி, தமிழீழவிடுதலைக்கு 'கட்டமிட்டே' தன்னுயிரைத் தியாகம் செய்த "கரும்புலி—கப்டன் மில்லர்"

www.tamilarangam.net



# தீர்மானம்

நான்கு... அல்லது
அதிகபட்சம் ஐந்து பேர் இருக்கும்
அவசரமாய்
மிக மிக அவசரமாய்
கூடிக் கொண்டார்கள்!
வாராவாரம் நடக்கின்ற
வாராந்தக் கூட்டமாம்
ஈழத்தின் நிலைவரம்
மோசமாகி விட்டது!
படுகொலைகள்! கொள்ளைகள்!
கற்பழிப்புக்கள்!
அடக்கு முறைகள்...
“உலகத் தொழிலாள வர்க்கமே ஒன்றுபடு!”
உறுப்பினர்களின்
ஏகோபித்த ஆதரவில் தீர்மானம்
நிறைவேறப்பட்டது!
சரி இத்துடன் கூட்டம்
இனிது நிறைவுறுகின்றது!
குறித்த நேரத்தில் குறித்த இடத்தில்
அடுத்த கிழமையும்
வாராந்தக் கூட்டம் வழமைபோல்
நடக்கும்!

www.tamilarangam.net



தமிழீழ விடுதலைப் போராட்டப்பாதையில்

# தேசிய விடுதலை இயக்கமும் பயங்கரவாதக் குழுக்களும்

இது ஒரு மீளாய்வு

ஏகாதிபத்திய எதிர்ப்பும்– விடுதலை தாகமும் நிரம்பிய ஒரு புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டத்தின் அதி முக்கியத்துவமான நிலையில் நின்றவாறு தெளிவாக இனம் காணப்பட்டுள்ள வேறுபாடுகளை ஆழமான அரசியல் பொருளாதார நோக்குடன் அணுகவேண்டிய ஒரு மீளாய்வு.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழீழத்தின் தொழிலாள–விவசாய மக்களின் உருக்குறுதி வாய்ந்த அணிதிரளுடன் தமிழீழம்–சோசலிச சமூக நிர்மானம் என்கின்ற புரட்சிகர இலக்குடன் தேசிய இயக்கமாக உருப்பெற்றுள்ள நிலையில் ஏகாதிபத்திய இந்திய முதலாளித்துவ தலைமைகளின் பராமரிப்பில்–கூலிப்படைகளாக உருவாகியுள்ள பிற தமிழர்குழுக்களின் இன்றய நிலைக்கான உயிரோட்டமான காரணத்தை கானவேண்டும் என்ற நோக்கிலான மீளாய்வு.

* * * * * * * * * *

அடிப்படையில் தேசிய அடக்குமுறை என்பது முதலாளித்துவ–காலனித்துவ–ஏகாதிபத்திய நலன்களின் வெளிப்பாடுதான் என்பதுவும் அடக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்கள் மேற்கூறிய அடக்குமுறை வடிவங்களிற்கு எதிரானபோர் பரணி என்ற கோணத்தில் மற்போக்கானது என்பதுவும் விஞ்ஞான பூர்வமான நிலைப்பாடாகும். எனினும் எப்போதும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் முழுமையான வர்க்கப் போராட்டங்களின் போக்கிலிருந்து சற்று மாறுபட்டே காணப்படுகின்றது.

தேசிய விடுதலைப்போராட்டங்கள் அடக்கப்பட்ட தேசிய சமூகத்தின் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினரினதும் போராட்டமாகவே வெடிக்கின்றது. தேசிய அடக்கு முறையின் கோரப்பிடியில் அதாவது அடக்கும் எசமான்களின் கோரப் பிடியில் அடக்கப்பட்ட சுமூகத்தின் சகல தரப்பினருமே

www.tamilarangam.net



தர வர்க்கத்தினர், ஏன் அடக்கப்பட்ட சமூகத்தின் மேல்த் தட்டு வர்க்கத்தினரும் இக்கோரப்பிடியில் அகப்பட்டுவிடுகின் றனர். இதனால் தமது நலன்களுக்காக— பாதுகாப்பிற்காக சமூகத்தின் முழு மக்களும் ஒன்றிணைகின்றனர். "சகல மக்களும் ஒருவர் மேல் ஒருவர் அனுதாபம் கொள்ளுகின்றனர்" என சீனப்புரட்சியாளன் மாவோ இதனை வர்ணித்தார். ஆக ஒடுக்கப்பட்ட சமூகத்தின் சகல தரப்பினரையும் சேர்த்த தாகவே தேசிய விடுதலைப்போராட்டங்கள் கருக்கொள் கின்றன. இதனது அடித்தளம் பரந்துபட்டுக்காணப்படுகின்றது. ஆனால் போராட்டப்போக்கில் மேல்த்தட்டு வர்க்கத்தினர் தமது நலன்களை மட்டும் முன்வைத்து எதிரியுடன் சமரசம் செய்துகொள்ள முனைவதும், நடுத்தரவர்க்கத்தினர் அங்கும்— இங்கும் தள்ளாடுவதும் இடம்பெறுகின்றது. போராட்டம் கடுமை அடையும் நிலையும்— எதிரி கொடூரத்தின் முனை களை கூர்மைப்படுத்தும் பொழுது அடிமட்டவர்க்கத்தினரே அவற்றை எதிர் கொள்ளுகின்றனர். அவற்றை எதிர்த்துப் போராடுகின்றனர். ஈற்றில் உண்மையான சுதந்திரத்தை தேசத்திற்கு பெற்றுத்தருகின்றனர்.

இங்கு எழும் வினா "இந்தப்போக்கு எவ்வாறு தீர்மானிக்கப் படுகின்றது?"— இதுவே உண்மையாக புரட்சிகர அர்த்தத்தில் தேசிய விடுதலை இயக்கத்தை வகைப்படுத்துகின்றது.

* * * * * * * * * *

பரந்துபட்ட தளத்தில் அதாவது குறிப்பிட்ட வர்க்கத்தினை மட்டும் சாராது சகல வர்க்கத்தினரும் ஒருவர் மேல் ஒருவர் அனுதாபம் கொண்டு தேசிய விடுதலைப்போராட் டத்தை கருக்கொள்ள வைக்கையில் அவ்போராட்டத்தினை போர்த்தந்திரங்களை—அரசியல் சித்தாந்த வழிமுறைகளை நெறிப்படுத்தும் பொறுப்பு தாபனமயப்படுத்தப் பட்ட அமைப்பிடம் செல்கின்றது. அத்தாபனத்தின்பின்னால் மக்கள் அணி சேர்கின்றனர். அடிமட்டதொழிலாள—விவசாய மக் களிடம் இருந்தும், நடுத்தரவர்க்கத்தினரிடமிருந்தும், மேல்த் தட்டு மக்களிடமிருந்தும் பெறப்பட்ட போராளிகளே தாபனத்தை இயக்கும் சூழ்நிலை நிலவுகின்றது. இது ஒரு இயங்கியல் போக்கு. ஆனால் போர்க்களம் இத் தாப னத்தை தூய்மைப்படுத்துகின்றது. சரியான— உறுதியான தாபனத்தை உருவாக்குகின்றது. மேல்மட்ட வர்க்கத்தினரின் நலங்களை அல்லது நடுத்தரவர்க்கத்தின் நலன்களை எதிரி தானம் செய்து உண்மையான சுதந்திரத்தை தடுத்து நிறுத் தும்போது அல்லது மேல்த்தட்டு வர்க்கத்தினரின் அல்லது

www.tamilarangam.net



நடுத்தரவர்க்கத்தினரின் நலன்களுக்காக சுதந்திரம் பலியாக்கப்படும் போக்கை எதிர்த்து நின்று உண்மையான தேசியவிடுதலைக்காக போராடும் சக்திகளே ஈற்றில் புரட்சிகர அர்த்தத்தில் தேசிய இயக்கமாக நிலைபெறுகின்றனர். இது மிகச்சிக்கல் வாய்ந்த பிரச்சனையாகும். தேசிய விடுதலைப்போராட்டம் கருக்கொண்ட போது இணைந்த சக்திகள் பிரசவித்த இயக்கங்கள் உண்மையான புரட்சிகர அர்த்தத்தில் தேசிய விடுதலைக்காக தூய்மைபடுவது எவ்வாறு? இதனை கியூபா புரட்சியாளன் பிடல் காஸ்ரோ "புரட்சிகர மனச்சாட்சியை விரிவடையச்செய்தல்" என்ற வார்த்தைகளால் வர்ணித்துள்ளார்.

இந்த புரட்சிகர மனச்சாட்சியை
வெகுசன போர்க்களமே தருகின்றது.
கொடிய எதிரிக்கு எதிராக போராடும் மனத்திண்ணம்;
வெகுசனங்களை உண்மையாக நேசிக்கும் மனோபாவம்;
தியாக உணர்வு;
தனக்கு இழப்பதற்கு ஒன்றுமின்றி ஈற்றில் அஞ்சாது உயிரைக்கூட இழக்கும் மனோபாவம்;
சகல அடக்குமுறைகள் மேலும் மூர்க்கத்தனமான கோபம்

—என இன்னோரன்ன அனுபவங்களை கிரகித்துக் கொள்ளும் தாபனம் புரட்சிகர மனச்சாட்சியை பெற்றுக் கொள்கின்றது. இதுவே உண்மையான தேசிய இயக்கமாக வரலாற்றுப் போக்கில் தீர்மானிக்கப்படுகிறது. மாறாக மேல்த்தட்டு–நடுத்தர வர்க்க நலன்களை மட்டும் பெற்றுக்கொண்டவுடன் திருப்திகாணும் தாபனங்கள் வரலாற்றுப்போக்கில் அழிக்கப்படுகின்றன. அவை தனதுபோக்கில் பிற்போக்கான மனச்சாட்சியைக் கொண்ட சக்திகளின் தனி ஆளுமைக்கு உட் செல்வதனையே அந்த முடிவை பெறுகின்றது.

* * * * * * * * * *

சாதிய கோடுகள் ஊடாக பிரிவினையையும் பலமான நடுத்தர வர்க்கத்தினரையும்–நீண்ட அடிமைத்தனத்தினையும் கொண்ட தமிழீழ சமூகத்தினுள் 70களில் தோன்றிய ஆயுதப்போராட்டம் ஒரு மாற்றத்தைக்கொடுத்தது. இன்றுவரை நீண்ட சுமார் 15 வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுத போராட்ட வரலாற்றையும்–சுமார் 15 வருட அனுபவங்களூடாக தேசிய இயக்கமாக மிளிரும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சுற்றிப் பிணைந்ததே தமிழீழ போராட்ட வரலாறு ஆகும்.

www.tamilarangam.net



வழமையான போக்கில் சகல மட்டங்களிலும் இருந்து பெறப்பட்ட சக்திகளில் இருந்து தோற்றம் கண்டு காலப் போக்கில் அதாவது வரலாற்றுப் போக்கில் அனுபவங்களால்—அர்ப்பணிப்புக்களால்—அடக்குமுறை மேல் கொண்ட மூர்க்கமான கோபத்திலும்— உண்மையான சுதந்திரத்தின் மேல் கொண்ட தீராத தாகத்திலும் புரட்சிகர மெருகு பெற்று தமிழீழ விடுதலைப்புலிகள் தேசிய இயக்கமாக உருவாகியுள்ளனர்.

சிங்கள இனவாத தலைமைகளுக்கு எதிராக — தொடர்ச்சியாக உறுதியான போராட்டத்தினை விடுதலைப்புலிகள் நடாத்தினர். சுமார் 650 தோழர்கள் இந்த தொடர்ச்சியான வெற்றிகொள்ளப்படும் நிலையை நோக்கிய போரிலே உயிர்த்தியாகம் புரிந்துள்ளனர். மக்களோடு வாழுதல்—மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல்— மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுதல் கட்டுப்பாடான கோப்பினுள் வளர்ச்சி காணல் என்பன ஆழமான அனுபவங்களை விடுதலைப்புலிகளுக்கு கொடுத்தது. விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் 72களில் ஆரம்பித்து இன்றுவரை தமிழீழ விடிவுக்காகவே இயங்கி வருகின்றார். 80கள் வரை விழிப்புப்பெறாதபெரும்பான்மைஅடிமை மக்கள் சமூகத்தினுள் உயிர்வாழ்ந்து விழிப்புப் பெறுவதை நோக்கி போர்ப்பரணி பாடி ; பலமான அரச இயந்திரத்தை தனது "பிஸ்டல்" ஊடாக எதிர்கொண்டு (இங்கு பிஸ்டல் ஊடாக எதிர் கொள்ளல் என்பது அந்த பிஸ்டல் தாங்கிய போராளி நன்கு விரிக்கப்பட்ட உளவுத்துறை —நவீன ஆயுதம் தாங்கிய அரச படைகள்— துரோகத்தனத்தை முதலாகக் கொண்ட சக்திகள் என்பவற்றைஎதிர்கொண்டு வாழ்ந்த மிகக்கடுமையான இன்னல்கள் நிறைந்த வாழ்வைக் குறிப்பது.) படிப்படியான அனுபவங்களூடாக வளர்ச்சி பெற்று பலமான தாபனத்தை உருவாக்கிய சிறப்புமிக்க போராளி தலைவர் பிரபாகரன். விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை நிரப்பும் சகலதோழர்களும் இன்னல்கள் நிறைந்த வாழ்வு ஊடாக— அடிமட்ட மக்கள் முதல் மேம்பட்ட மக்கள் வரை சகலருடனும் பழகியவர்களாக—அடக்குமுறை என்றால் என்ன என்பதை சகல அர்த்தத்திலும் புரிந்துகொண்டவர்களாக வளர்சி கண்டவர்கள். தளபதி மாத்தையா வன்னிப்பிரதேச தொழிலாள — விவசாய மக்களின் ஊடு கால்பதித்து புரட்சிகர மனச்சாட்சியை பெற்றுக்கொண்டவர். தளபதி கிட்டு யாழ்பிரதேச சமூகக் கொடுமைகளை கிரகித்து சமூக முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்து தேசிய ஆன்மாவை தட்டி எழுப்புவதற்காக அயராது உழைத்தவர்.

www.tamilarangam.net



விடுதலைப் புலிகளின் உயரிய உயிர் தியாகங்கள் தேசிய அடக்குமுறை மீது புலிகள் கொண்ட மூர்க்கத்தனமான கோபத்தை வெளிப்படுத்துகின்றன. மக்களின்நலனுக்காக— இயக்க நலனுக்காக இயலாமல்போன தன்னை சுட்டுக் கொல்லுமாறு பணித்த சீலன் முதல் 12நாட்கள் மக்களுக் காகவே அணுவணுவாக உயிர்த்தியாகம் புரிந்த திலீபன் வரை, வெடிகுண்டுடன் அடக்குமுறை இயந்திரத்தை நோக்கி கோபமாக பாய்ந்த மில்லர் முதல் அடக்குமுறையாளர்களை மாற்ற நாம் போராடவில்லை அடக் குமுறையை உடைக்கவே நாம் போராடுகின்றோம் என தமிழீழம் போர்தொடுக்க காலாக இருந்த தளபதிகள் புலேந்திரன்,குமரப்பா உட்பட 12 தோழர்கள் வரை அனைவரது உயிர்த்தியாகங்களும் மிக மிக மரியாதைக்குரியன.

விடுதலைப்புலிகள் என்ற அமைப்பின் ஆன்மா தேசியஅடக்குமுறைகளை நிராகரித்து அதற்கு எதிரான போரிற்கு எதனையும் இழப்பதற்கு தயாராக திகழ்கின்றது. சிறீலங்கா அடக்குமுறைகளை வெற்றி நெருங்கும் பொழுது இந்திய ஏகாதிபத்தியம் தலையிட்டதும், பிரமாண்டமான இராட்சத இந்திய அரச இயந்திரங்களை எதிர்த்தும் விடுதலைப்புலிகள் ஆயுதம் தூக்கியது நிகழ்ந்தது.

இது ஒரு திருப்பம்.

நேரடியாக ஏகாதிபத்திய எதிர்ப்புப்போரில் விடுதலைப் போராட்டம் கால்பதிக்கின்றது. கேடுகெட்ட டில்லி முதலாளித்துவ,பார்ப்பன அரச இயந்திரத்திற்கு எதிராக அடிபணிய முடியாது என்ற நிலைப்பாடு விடுதலைப்புலிகளை புரட்சிகரமாக்கியது.

டில்லி ஆளுமையானது

1. மேல்தட்டு மக்களின் நலன்களை தீர்க்கக் கூடியது. சிறப்பாகக்கூறுவதானால் தென்னாசிய முதலாளித்துவ நலன் களின் காப்பாளன் டில்லி அரச இயந்திரமே.

2. நடுத்தர மக்களை கவரக்கூடிய அல்லது ஈர்க்கக் கூடிய சூழ்நிலையை டில்லி அரசு கொண்டுள்ளது.

ஆனால் தமிழ் ஈழத்தில் தொழிலாள—விவசாயமக்கள் டில்லி ஆளுமையால் மோசமாக இப்போ இருப்பதிலும் மோசமாக நசுக்கப்படுவர்.

www.tamilarangam.net



இங்குதான் தீர்மானிப்பு இடம்பெறுகின்றது.

மேல்மட்ட, நடுத்தரவர்க்க நலன்களை மட்டும் பெற்றுக் கொண்டு ஒதுங்கிக்கொள்வதா?

புரட்சிகர மனச்சாட்சியை பெற்றுக்கொண்டு உண்மையான விடுதலைக்காக போராடுவதா?

இங்கு விடுதலைப்புலிகளின் தீர்மானம் புரட்சிகரமானது.

87 யூலை வரை பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஊடாக ஏகாதிபத்திய எதிர்ப்பு போர்க்குரலை விடுதலைப்புலிகள் ஒங்கி ஒலித்தனர். தியாகங்கள் புரிந்தனர், மோசமான இன்னல்களை கண்டனர். அனைத்தையும் தாண்டி—அனைத்தையும் வென்று தமிழீழத்தின் தொழிலாள—விவசாய மக்களின் உறுதியான அணிதிரளலுடன் உரம்பெற்று நிற்கின்றனர்.

இந்த அர்த்தத்தில் தேசிய இயக்கமாக பரிமானம் பெறுகின்றனர்

* * * * * * * * * *

இன்று ஏகாதிபத்திய டில்லி முகாமின் பராமரிப்பில் EPRLF, TELO, ENDLF, TULF, PLOTE ---------- எனும் பெயர்களின் போர்வையில் பயங்கரவாதக்குழுக்கள் பராமரிக்கப்படுகின்றனர். பயங்கரவாதக் குழுக்களுக்கே உரிய கொலைவெறி—முகமூடி நடவடிக்கைகள்— பொது மக்கள் மீது கோபம்—கோழைத்தனம்—பதவிவெறி என்பன இக்குழுக்களிடம் தாண்டவமாடுகின்றன.

இவை ஏன் இப்படியாயின?

மேற்கூறிய குழுக்களின் சிதறுநிலைக்கு மூலகாரணம் அக் குழுக்களினுள் செல்வாக்கு செலுத்திய சக்திகளே.

வாய்சவடால்—வெற்றுப்பேச்சு—மூடமான நிலமைஎன்பனவே இக்குழுக்களின் கடந்த கால வரலாறு. தமிழ் ஈழத்தில் குறிப்பாக யாழ்பாண நடுத்தர வர்க்கத்திலிருந்து தோன்றிய தலைமைகளைக்கொண்ட இக்குழுக்கள் போராட்டம் ஊடாக புரட்சிகர மனச்சாட்சியை பெற்றுக் கொள்ளவில்லை. அதற்கான அடிப்படை தயாரிப்புக்களில் கூட ஈடுபடவில்லை.

PLOTE தலைமையானது தமிழீழ விடுதலைப்புலிகள்அமைப்பிலிருந்து அமைப்பு விதிகளுக்கு உட்படாது தப்பி ஓடிய உதிரிகளின் தலைமைத்துவத்தைப் பெற்றது. நிஜமான

www.tamilarangam.net



போர்க்களத்தில் நிலைபெறாததால் இக்குட்டிப்பூசுவாக்கள் பாட்டாளி வர்க்க பிரக்ஞையை பெற்றுக் கொள்ளவில்லை. எப்போதும் தன்னை தற்காத்துக்கொள்வதிலும்—தம்பட்டம் அடிப்பதிலும் ஈடுபட்ட PLOTE தலைமை விடுதலைபுலிகளை எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே PLOTE அமைப்பினுள் சென்ற சிறப்புமிக்க பல போராளிகளை தமிழ் நாட்டு முகாம்களில் முடக்கிவைத்து அவர்களது புரட்சிகரசிந்தனைகளை கொன்று கொரில்லா போர்முறைக்கு எதிராக "கட்டுரை" தீட்டியது.

TELO எதுவித அரசியல் இலட்சியமும் அற்ற "நாம் ஆயுதம் தூக்குகின்றோம் இந்தியா எம்மை தீர்மானிக்கட்டும்" எனப்பிரகடனப்படுத்திய தலைமை கொண்ட குழு.

ENDLF — PLOTE ன் சிதறல்.

EPRLF மிகத்தேர்ந்த குட்டிப்பூர்சுவா தலைமைத்துவத்தை கொண்ட குழு. வாய்ச்சவடால்—வறட்டுத்தனம்—குழப்பம்— தடுமாற்றம் என்பனவே அக்குழுவின் மூலதனம். இடதுசார "கதைகளுடன்" தோன்றிய இக்குழு [redacted] சமூகவிரோதிகளை தன்னுள் அணைத்துக் கொண்டது. 83 தந்த அதிர்வில் வெடித்துக் கிளம்பிய தமிழ் மக்களின் ஆவலை திருட்டுத்தனமாக பயன்படுத்தி சிறுபகுதி இளைஞர்களையும்—யுவதிகளையும் ஈர்த்துக்கொண்டது. உறுதியான விடுதலைப் போராட்டத்தின் புயல் வேகம் முன் இத்தலைமையால் நின்று பிடிக்க முடியாது இந்திய எசமானர்களின் பாதங்களில் தலை சாய்த்துக் கொண்டது.

மேற்கூறிய குழுக்களில் ஆதிக்கம் பெற்ற சக்திகள் நடுத்தரவர்க்க பிற்போக்குச்சக்திகளே. போர்க்குணம்சமோ—இலட்சியப்பற்றோ—தியாக உணர்வோ இவர்களிடம் கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாது. இதனல் இக் குழுக்களில் இணைந்த பல உணர்வுமிக்க போராளிகள் மழுங்கடிக்கப்பட்டனர். இந்த பிற்போக்கான தன்மையை இந்திய எசமான்கள் பயன்படுத்திக்கொண்டனர். மேல்மட்ட—நடுத்தரமட்ட நலன்களைக்காட்டி இக்குழுக்களைக்கொண்டு மக்களை ஏமாற்ற முயன்றனர். இப் பிற்போக்கு சக்திகளும் இதனை ஏற்றுக்கொண்டன.

இது ஒரு நிகழ்சிப் போக்கே.

www.tamilarangam.net



ஈற்றில் எழும் வினா,

தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமையான நடவடிக்கைகள் மூலம் மேற்கூறிய பிற்போக்குச்சக்திகள் கடந்த காலத்தில் அடக்கப்பட்டபோது, அழிக்கப்பட்ட அக் குழுக்களின் தோழர்கள் பற்றியது. இவ் மோதலை இயக்கமோதல் – குழுமோதல் என குறுகிய வட்டத்தில் அடக்க முதலாளித்துவ சக்திகள் – முதலாளித்துவ செய்தித்தொடர்பு சாதனங்கள் முயற்சிக்கின்றன. உண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் இக்குழுக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்காகும். பிற்போக்கான தலைமைத்துவங்களுக்கு எதிராக புரட்சிகர மனசாட்சியை ஈட்டிக்கொண்ட மக்கள் தலைமைச்சக்தி தொடுத்த போராகும். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பலியாக்கப்பட்டனர்.

இங்கு எழும் வினா,

புரட்சிகரமான தேசிய விடுதலையை காப்பாற்றுவது என்பது லட்சோபலட்சம் நலன்கள் பற்றியதே. அன்று விடுதலைப்புலிகளால் நடவடிக்கை முன்னெடுக்கப்படாது விடப்பட்டிருந்தால் இன்று தேசிய ஆன்மா குற்றுயிராக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கும். பயங்கரவாதக்குழுக்களும் இந்திய முதலாளித்துவ எசமான்களும் இன்று கொடிகட்டி பறந்திருப்பர். தமிழீழத்தின் தொழிலாள – விவசாய மக்களின் நலன்கள் படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும். ஆனால் ஆற்றல் மிக்க தமிழீழ தேசிய விடுதலை தாபனமான விடுதலைப் புலிகள் வரலாற்றை சரியாக வழிகாட்டி வருகின்றனர். சோசலிச தமிழீழம் நிஜமாகி வருகின்றது.

– –பிரசாத்– –

"புரட்சிப் புயல் வீசிய காலத்தில் பிறந்தோம். பெருமிதமுள்ள சிறந்த இலட்சியத்தை நோக்கி எங்கள் மக்களுக்கு மட்டும் நாங்கள் அடிமேல் அடி வைத்து புயலின் ஊடு செல்கின்றோம்."

–ஜூலியஸ் பூசிக்–
(செக்கோஸ்லோவாகியா
புரட்சியாளன்)

www.tamilarangam.net



# மேஜர் பசிலன்

(அமுதலிங்கம் 05.03.1961 - 08.11.1987)

சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்டு திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்ற தமிழ் மக்கள், தம் உரிமையைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மிதவாதிகளுக்கு ஓட்டுக்களை அள்ளி வழங்கினார்கள்.

சிங்கள பேரினவாத அரசு மாநில சுயாட்சி, மாவட்ட சமஷ்டி ஆட்சி என்று உரிமைகளற்ற திட்டங்களைத்தீட்டி இதே மிதவாதிகள் மூலம் ஏமாற்றியபோதும் சாத்வீக முறையிலேயே தம் உரிமை கேட்டு போராடினார்கள் தமிழர்கள்.

ஆனால் இன ஒழிப்பின் உச்சத்தில், பாரம்பரிய பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஆக்கப்படுவதையும், சொந்தக் கிராமங்களிலிருந்து கட்டிய துணியுடன் அடித்து விரட்டப்பட்டு, உணவின்றி, தங்க இடமின்றி அநாதைகளாக்கப்படுவதையும், காரணமின்றி கண்ட கண்ட இடங்களில் சுடப்படுவதையும் கண்ணெதிரே கண்டபோதுதான் அகிம்சை தம்மைப் பாதுகாக்காது எனப் புரிந்து கொண்டனர்.

ஆயுதமேந்தி உரிமைக்காகப் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது தமிழ் இளைய சமுதாயம்

ஸ்ரீ லங்கா அரசு மக்களை இம்சிப்பதையும், வெலிகடைச் சிறைச்சாலையினுள் கைதிகளாக்கப்பட்டிருந்த அப்பாவித் தமிழர்களை சக சிங்களக் கைதிகளும் சிங்கள இராணுவமும் இணைந்து திட்டமிட்டு மிருகத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டதையும் கண்டு, ஈழ விடுதலையே இறுதித் தீர்வு என்ற உறுதியான முடிவிற்கு வந்தான் முள்ளியவளையைச் சேர்ந்த ஓர் இளைஞன்.

உறுதியான கொள்கையையும் தளம்பாத தலைமையையும் தமிழீழ விடுதலைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் கொரிலாப் படையையும் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளிலேயே இது சாத்தியம் என்பதை உணர்ந்து அவர்களுடன் தன்னை இணைத்துக்கொண்ட அமுதலிங்கம் என்ற அந்த இளைஞன்தான் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த பசிலன்,.

தமிழர்க்கெதிரான இன அழிப்பில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடும் ஸ்ரீலங்கா கூலிப் படை மீது பசிலன் மேற்கொண்ட

www.tamilarangam.net



முந்திரிக் குளத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தை எதிர் கொண்டு பன்னிரு கூலிப்படையினரைக் கொன்றதுடன் தமிழினத்தை அழிக்கப் பயன்படும் 12 துப்பாக்கிகளை எடுத்ததன் மூலம்மக்களுக்கு ஓர் நம்பிக்கையைத் தோற்றுவித்தான் வவுனியா மாவட்டத் தாக்குதற் பிரிவின் தலைவன் மேஜர் பசிலன்.

கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின் போது காயமடைந்த பசிலன், கிளிநொச்சியைக் கட்டுப்பாடின் கீழ் கொண்டுவந்து இனப் படு கொலைகளை நிறுத்த விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொரில்லாப் போரில் முக்கிய பங்கு வகித்தான்.

ஒரு கெரில்லாப் போராளியின் திறமைகளைத்தன்னகத்தே முழுமையாகக் கொண்டிருந்த பசிலன் ஒரு சிறந்த விகடகவியும் நடிகனுமாவான். தமிழீழத்தின் மரபு நாடகங்கள் இவன் நடிப்பினால் மெருகூட்டப்பட்டது என்றால் மிகையாகாது. தன்னுடைய நகைச்சுவைப் பேச்சால் களைப்புற்ற சக தோழர்களைச் சிரிக்கவைத்துவிடு பவன் இவன். மக்களுக்குப் போராட்ட உத்வேகத்தைத் தூண்டிவிடும் நாடகங்களிலும் ஆவலுடன் பங்கேற்று திறமையாக நடிக்கும் பசிலன் தன்னுடைய கலகலப்பான சுபாவத்தால் மக்களின் அபிமானத்தைப்பெற்ற ஓர் போராளியாவான்.

தமிழீழமெங்கும் ஸ்ரீலங்கா அரசானது தமிழீழ மக்கள்மீது ஓர் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டு இனவெறியாட்டம் ஆடிக்கொண்டிருக்கையில், அடக்குமுறையாளர்களுக்கு எதிரான ஆயுதப் போர் ஓர் புதிய சகாப்தத்தைப் படைத்துக்கொண்டிருந்தது. இந்நேரத்தில் தமது சொந்தநலன்களுக்காக, அந்நிய நாட்டிலிருந்து மனித விரோதிகளை அமைதிப்படை என்ற பெயரில் அழைத்துவந்து மக்களைப் பலிகொள்ளும் தேச விரோதிகளின் செயல் கண்டு குமுறினான் பசிலன்.

கோப்பாயில் இந்திய அழிவுப் படையை எதிர்த்து தரைப் படை டாங்கிகள் ஐந்தினை நிர்மூலமாக்கி, விடுதலைப் புலி கெரில்லாக்கள் பற்றி இந்திய இராணுவத்திற்கு ஒரு பீதியைத் தோற்றுவித்த பசிலன், முல்லைத்தீவு நேரடி மோதலின்போது ஷெல் தாக்குதலால் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

தமிழீழ மண்ணிலிருந்து மறைந்தாலும் வரலாற்றில் ஒரு நிலையான இடத்தில்.......

மேஜர் பசிலன்

நன்றி
( உணர்வு - )

www.tamilarangam.net



# நிழலல்ல நிஜம்

— ஒளிச்சி

"சியஸ்"

நடுங்கும் கரங்கள் மதுக் கோப்பைகளுடன் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

மங்கலான இருள், எங்கும் ஒரே புகைமண்டலம்.

அடைக்கப்பட்ட ஜன்னல்கள் அதிரும் அளவிற்கு "மைக்கல் ஜக்சனின்" அதிரசகானம் அதிர்ந்து கொண்டிருந்தது.

குறைந்தது ஏழு அல்லது எட்டு ஆண்கள் இருக்கும், அவர்களுக்கு ஒத்தாசையாக அவர்களது மனைவியர்கள்.

"கோட்", "ரை" அணிந்த அந்தப் பெரியமனிதர்கள் (நம் நாட்டுப் பேர்வழிகள் தான்) உல்லாசமாக அந்தப் பொழுதைக் கழிக்க கூடியிருக்கின்றனர்.

ஏற்கனவே அருந்திய மதுவின் அளவை அவர்களது சிவந்த திருட்டு முழிகளில் அளவிடக்கூடியதாக இருக்கிறது.

அந்த சிவந்த திருட்டு முழிகளிலே மயக்கம்; பருத்த உடல்களிலே நடுக்கம்!

நிதானம் கொஞ்சம் கொஞ்சமாக நிலை இழந்து போய்க்கொண்டிருக்கிறது.

"சரோ, இஞ்ச கணேசனுக்கு கொஞ்சம் இறைச்சிப் பொரியல் கொண்டுவந்து கொடும்"

பெருத்த உருவம் கட்டளையிட்டது.

ஒன்றுக்கு இரண்டாக முண்டியடித்தபடி இறைச்சிப்பொரியலுடன் இரண்டு பெண்கள்!

கூப்பிட்ட குரலில் இருந்த அதிகாரத்தில் இருந்து வந்ததில் ஒருத்தி அவரது மனைவியாக இருக்கவேண்டும்.

ஒரு கையில் சிகரட்; மறு கையில் மதுக்கோப்பை.

இரண்டையும் மாறி மாறிச் சுவைப்பதில் எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பது அவரவர் நிலைமைகளையும் தன்மைகளையும் பொறுத்தது?

ஒரு வசதியான ஏமாற்றுப் பேர்வழி மதுமயக்கத்தில் உல்லாச வாழ்க்கையின் ஓரங்களுக்குச் சென்று வருவான்; ஆனால்! ஓர் நேர்மையான ஏழையால் மது போதையினூடு சூன்யத்தைத்தான் காணமுடியும்.

விதம் விதமான குடிவகைகள் அடங்கிய போத்தல்கள் முன்னால் உள்ள மேசையில் இவர்கள் தாகம் தீர்க்கக் காத்திருக்கின்றன.

www.tamilarangam.net



பலவகை உணவுப்பண்டங்கள் உட்கொள்ளும் மதுவுக்கு உரிசை சேர்ப்பதற்காக அழகிய விலையுயர்ந்த கோப்பைகளில் அள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன.
நவநாகரீக உடையணிந்த நாகரீக மங்கையர்கள் (தமிழீழத்தின் கண்மணிகள்தான் (?) ) இயன்றளவு தம்மை இசைவுபடுத்திச் சேவகம் செய்துகொண்டிருக்கிறார்கள்.
அசைந்துகொண்டிருந்த மனிதர்கள் தற்போது ஆட்டம் காணத் தொடங்கிவிட்டனர்.
நிதானத்தின் எல்லைப்புள்ளியைத் தாண்டி அவர்கள் மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்.
அவர்களைப் பொறுத்தவரை அரசியல் பேசுவதற்கான பக்குவ நிலையை அடைந்துவிட்டார்கள். இனி அவர்கள் தமிழீழப் போராட்டத்தின் கன பரிமாணங்களை, குற்றம் குறைகளை, நன்மை தீமைகளைப் பற்றி ஆதாரங்களுடன் (?) ஆராய்வார்கள்.
ஏனெனில்
இவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை மதுபோதையில்-- மல்லாந்து படுத்துக்கொண்டிருந்தபடிதான் யுத்தக் களத்தின் கோர நிஜங்களைப்பற்றி சூடாக விவாதிப்பவர்கள் !
பஞ்சு மெத்தையில் புரண்டபடி, மின் விசிறிகளுக்குக்கீழ் இருந்துகொண்டு தான் தொளிலாள வர்க்கப் புரட்சியைப்பற்றி தமக்குத் தெரிந்தவற்றை (?) புசற்றிக் கொண்டிருப்பவர்கள் !
குருதி வடுக்களின் கூரிய தன்மைகளை தம் சொந்த வாழ்க்கையில் கிஞ்சித்தும் அறிந்திடாத இவர்கள் — களப் பலியாகின்ற உன்னத மனிதர்களைப்பற்றி தமது துர் நாற்றம் வீசும் வாயால் தூற்றிக்கொண்டிருப்பவர்கள்.
ஆக; இவர்கள் மதுபோதையின் உச்ச நிலையில் இருந்துகொண்டுதான் நமது மண்ணின் அன்றாட நிகழ்வுகளைப் பற்றி மதிப்பீடு செய்பவர்கள்.
"கனகசிங்கம்....... உண்மையில மச்சான் எங்கட ஆக்கள் இந்தியனுக்கு............ (தணிக்கைக்கு உட்பட்ட சொல்) கொடுத்தாலும் அதிகாரத்தை வெண்டுட்டினம்"
"புலிகளுக்கு மண்டேக்க இருந்தாலெல்லோ"
கனகசிங்கம் என்னும் கனத்த மனிதன் மோவாயில்ஒட்டிக்கொண்டிருந்த இறைச்சித் துகள்களை புறங்கையால் துடைத்தபடி வழிமொழிந்தான்.
இவர்களெல்லாம் யார்?
புனிதமான ஓர் தேசிய விடுதலை யுத்தத்தை கொச்

www.tamilarangam.net



இவர்கள் யார் என்று நமது மக்களுக்கு இனம் காட்டவேண்டிய பொறுப்பு எமக்கு உண்டென்ற காரணத்தால் இதன் வாயிலாகத் தோலுரிக்க முனைகின்றோம்.

ஈழப் பொறுக்கிகள் (ஈ.பி) என்று மக்களால் தோழமையுடன் அழைக்கப்படுகின்ற (ஈ.பி என்று சொன்னால் ஐநூறு ரூபா அபராதமும் கசையடித் தண்டனையும் தமிழீழத்தில் வழங்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன) சமூக விரோதக் கும்பலின் அன்றைய பிரான்ஸ் நாட்டு ஏஜண்டுகள்தான் இவர்கள்; இன்று ( (?)

இந்தப் பெரிய மனிதர்களின் வார்த்தைப் பல்லக்கில் சவாரிசெய்த அவர்களது எஜமானர்கள், இந்தியத் துரையில் காலை நக்குகின்ற அண்மைக்கால நடவடிக்கைகளினால் இவர்கள் மனம் உடைந்துபோகவில்லை. மாறாக, நக்குகின்ற நாயின் காலை நக்கக் காத்திருக்கின்ற விசேட உணர்வுகள் பொருந்திய ஜந்துக்கள் தான் இவர்கள்!

அண்மையில் இந்தியத் துரையால் நடாத்தப்பட்ட மாகாண அரசுத் தேர்தல்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக (யாருக்கு என்று புரியவில்லை) இங்கிருந்து இந்த அறிவாளிகள் கும்பலும் சென்றதாம். அங்கிருக்கின்ற ஆயுதம் தாங்கிய ஈ.பி காடையர்களுக்குஇவர்கள் ஈ, பியின் முக்கியமான பிரமுகர்கள் என்று அறிமுகப் படுத்தப்பட்டனராம்

'கி....கி....பொல்லாத தமாஷ்சு...'

பிழைப்புக்காக அந்நிய நாடு வந்த இந்த அகதிகளுக்கு, கள்ள ஒவ்று எழுதி மக்களிடம் காசு புறிக்கும் கலை நன்கு தெரியும்.

போதைப் பொருட்கள் கடத்தும் வழிமுறைகள் புரியும்.

இன்னொரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஆட்களைக் கடத்திச் செல்லுகின்ற புதிய பாதை தெரியும்.

ஆனால்!.... நம் நாட்டு மக்களின் உணர்வுகள் எப்படித் புரியும்?

அல்லல் படுகின்ற அந்த மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிறப்பெடுக்கின்ற அரசியல் எப்படித்தெரியும்?

என்னமோ!..... ஒரே குழப்பமாய் இருக்கு...

ஆனால் ஒன்று.......

விடுதலைப் புலிகளின் கூரிய விழிப் பார்வை யிலிருந்து இவர்கள் தப்பிக்க முடியாது என்பதில் யாருக்கும் குழப்பம் வர நியாயம் இல்லை.

---

– உமலி –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொது எழுச்சிக்கான அறைகூவல்

(கோ-சி-மின், மகத்தான வியட்நாம் புரட்சியாளன். அவர் ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் தன் தேச மக்களுக்கு விடுத்த அழைப்பு இது. இன்று தமிழீழம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக தொடுக்கும் போருக்கும் இது பொருந்தும்.

ஆ.கு..)

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், நான் எழுதிய கடிதம ஒன்றில், நீங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருந்தேன். ஏனெனில், ஒற்றுமைதான் வலிமை தரும; விடுதலையையும், சுதந்திரத்தையும் மீண்டும் பெற்றுத் தரக்கூடிய வலிமையை அது ஒன்றால்தான் அளிக்க முடியும.

இப்போது, ஜப்பானிய ராணுவம் நசுக்கப்பட்டிருக்கிறது. தேச வியோசன இயக்கம் நாடு முழுவதும் பரவியுள்ளது. வியட்நாமிய (வியட்மின்) விடுதலைக்கான புரட்சிகர முன்னணியில் அறிவுஜீவிகள, விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்கள், படைவீரர்கள் என அனைத்து சமூகத்தினரும் இணைந்திருக்கிறார்கள். மேலும் கின், தோ, நுங், மெயாங், மான் போன்ற நமது நாட்டின் அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த லட்சக்கணக்கான உறுப்பினர்களும் அதில் அங்கம் பெற்றிருக்கிறார்கள். எந்தவிதமான பால் வேறுபாடோ, மத வேறுபாடோ, தராதர வேறுபாடோ, வயது வேறுபாடோ இல்லாமல் நமது சகதேச பக்தர்கள், போர்க்களத்தில் கரம் கோர்த்து அணிவகுத்துச் செல்கிறார்கள்.

அண்மையில், வியட்மின் முன்னணி, வியட்நாமிய மக்கள் காங்கிரசைக் கூட்டியது. தேச விடுதலை பெறும் வரை நடத்தப்படும் தீர்மானகரமான போராட்டத்தில் மக்கள் அனைவரையும் வழி நடத்திச் செல்வதற்காக தேசிய விடுதலைக் குழுவை அது அமைத்தது.

---

* **1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 16-ம் நாள் வியட்மின் பொதுக்குழு கூட்டிய தேசிய காங்கிரசுக்குப் பின் எழுதியது.**

www.tamilarangam.net



தமது விடுதலைக்காக, ஒரு நூற்றாண்டு காலமாக நமது மக்கள் நடத்தி வந்த போராட்ட வரலாற்றில் இது ஒரு மிகப் பெரிய முன்னேற்றமாகும். நமது சக தேசபக்தர்களை மகிழ்ச்சியில் ஆழ்ந்துவதும், எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவதும் இந்த விஷயமே.

இருந்த போதிலும், இதுவே போதுமானது என்று நாம் திருப்தியடைந்துவிட முடியாது. நமது போராட்டம் மிகவும் நெடியது; கடுமையானது. ஏனெனில், ஜப்பானியர் கள் முறியடிக்கப்பட்டவுடன், ஒரே இரவில் நமக்கு விடுதலை கிடைத்துவிடப் போவதில்லை. மாறாக, நாம மேன்மேலும் முயற்சிகள் செய்ய வேண்டும்; போராட்டத்தை முன் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில், ஒன்றுபட்ட போராட்டம் மட்டுமே நமக்கு விடுதலையைத் தேடித்தரும்.

இன்றைய நிலையில், வியட்மின் முன்னணிதான் போராட்டத்தின் அடித்தளம்; அதுவே, மக்களின் ஒற்றுமைச் சின்னம். வியட்மின் முன்னணியில் சேருங்கள்; அதற்கு ஆதரவு தாருங்கள், அதற்குப் பெருமையும் வலிமையும் சேருங்கள்.

சொல்லப் போனால், இந்தத் தருணத்தில், தேசிய விடுதலைக் குழுவே நமது தற்காலிக அரசாங்கம் ஆகும். அதன்கீழ் ஒன்று கூடுங்கள். தேசமெங்கிலும், அதன் கொள்கைகளும் கட்டளைகளும் நிறைவேறட்டும்!

இந்தப் பாதையில் சென்றால் நமது தந்தை நாடு நிச்சயமாக விடுதலை அடையும்; நமது மக்கள் வெகு விரைவில் நிச்சயமாக சுதந்திரம் பெறுவார்கள்.

நமது மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் நேரம் வந்து விட்டது. நம்மை விடுவித்துக் கொள்ள நமது வலிமை அனைத்தையும் திரட்டி எழுவோம்!

உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் தங்களுடைய விடுதலையை வெற்றி கொள்ள ஒருவரோ டொருவர் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறு கிறார்கள். நாமும் பின்தங்கி நின்றுவிடக் கூடாது.

முன்னேறுங்கள்! முன்னேறுங்கள்! வியட்மின் முன்னணிப் பதாகையின்கீழ் வீரத்துடன் முன்னேறிக்கி நடை போடுங்கள்!

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்



மாகாணசபை, பாராளுமன்றம் என்ற மாய வலைக்குள் மக்களை சிக்கவைக்க, விடுதலையின் எதிரிகளான நம்மினத் துரோகிகள் துணையோடு அந்நியன் கங்கணம்கட்டி நிற்க, இச் சூழ்ச்சிகளில் சிக்காத இவற்றைப் புரிந்து கொண்ட மக்கள் எழுச்சியோடு, இனவாதத்திற்கெதிரான நமது — போராட்டம் தொடர்ந்து செல்கின்றது.

இந்நிலையில் ஆயுதம் ஏந்திய, ஏந்தப் போகின்ற பெண்களைப் பற்றி மக்கள் கூர்ந்து அவதானிக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஆண் மேலாதிக்க ஒடுக்கு முறையும் அதை நியாயப் படுத்தும் கலாச்சாரப் பாரம்பரிய அடக்கு முறைகளும்— நம்மை அழுத்திக் கொண்டிருக்கும் இந்த சமுதாயத்தில்சிங்கள இனவாதத்திற்கெதிரான தேச விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்குப் பெண்களிற்கு இரட்டிப்புத் துணிச்சல் தேவைப்படுகிறது.

www.tamilarangam.net



இவ்விதம் அதீத துணிச்சலோடு சமூக அடக்கு முறைகளை உடைத்துக் கொண்டு களம் புகுந்து, போர்க் களம் புகுதல் பெண்களால் முடியாதெனவும் தலைமறைவு வாழ்க்கை (கெரில்லா வாழ்க்கை) பெண்களிற்கு பொருந்தாதெனவும் கருதியிருந்த சமுதாயத்தின் கண்ணோட்டத்திலேயே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எமது விடுதலைப் புலிகளின் பெண்களணி.

மேலும் தமது சொந்த வாழ்வைத் துறந்து தாயக மண் மீட்புக்காகவும், தமிழினத்தின் சுதந்திரத்திற்காகவும் உயிர்த் தியாகம் புரிகின்ற அளவிற்கு மனோதிடமும், இலட்சிய உறுதியும் கொண்டு உழைக்க முடியும் என்பதையும் நிரூபணமாக்கியுள்ளனர், நம்மை விட்டுப் பிரிந்து தாயக மண்ணோடு மண்ணாகச் சங்கமமாகிவிட்ட நம் தோழிகள்.

மேலும் இவர்களின் சாவும் சாதனைகளும் சமுதாயத்தில் பெண்களை இன விடுதலை சம்பந்தமாகவும், பெண் விடுதலை சம்பந்தமாகவும் சிந்திக்க வைக்கும் ஒளிக்கீற்றாகவும் பெண்களைத் தேச விடுதலை இயக்கத்தினுள் உள்வாங்கும் பாரிய சக்தியாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறதென்பதையுங்கூட எங்கள் பெண்கள் படைப்பிரிவின் வளர்ச்சி தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பெண்கள் அமைப்புக்களில் ஆயுதம் தாங்கும் படைப்பிரிவு, நாளை புரட்சிகர அணியில் பெண்கள் ஆயுதம் ஏந்தும் படைப்பிரிவாகப் பரிணமிக்கும்!

அப்போது நாம் தமிழீழத்தின் சுதந்திரத்துடன் தேச விடுதலையையும், பெண்கள் விடுதலையையும் ஒருங்கே வென்றெடுத்தவர்களாவோம்!

[illegible].......

உடல் நாராய்க் கிழிந்து
உதிரம் ஆறாய் ஓடும்
தெரிந்துதான் வந்தோம்!
தாயகச்சிறை மீட்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது வரையில் களத்தில் நின்று வீரமரணத்தை தழுவிக் கொண்ட எம் வீராங்கனைகள்......

| திகதி | இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணம் அடைந்த சம்பவம் |
|---|---|---|---|---|
| 10/10/87 | 2ஆம் லெப். மாலதி | சகாயசீலி | மன்னார் | கோப்பாயில் நேரடி மோதலின்போது காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு. |
| 19/10/87 | விஜி | கோமதி | கோண்டாவில் | கோப்பாயில் செல் தாக்குதலில் |
| " | ஜெனா | புஸ்பலதா | கன்னாட்டி | " " |
| 03/11/87 | ரூபி | மரியம்மா | இலுப்பைகடவை | கொக்குவில் செல் தாக்குதலில் |
| " | சபாரி | கம்சா | திருநெல்வேலி | " " |
| 20/12/87 | சசிலா | இரஜினி | மன்னார் | அச்செழு சுற்றிவளைப்பில் காயமடைந்த நிலையில் சயனைட் அருந்தி. |
| 23/12/87 | லெப். தர்சினி | சிவரஞ்சினி | ஓமந்தை | உரும்பிராய் நேரடி மோதலில். |
| " | நிதி | சிவமனோகரி | இடைக்காடு | " " |
| " | நிர்மலா | ஜெனின் அனந்தி | யாழ்ப்பாணம் | " " |
| " | நிசிந்தா | பிரேமலா | சாவகச்சேரி | " " |
| " | சுதா | செல்வராணி | முள்ளியவளை | " " |
| 13/03/88 | ரைசாகினி | சுதாங்கனி | கொடிகாமம் | வேலணையில் எமது முகாம் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு. |
| " | லெப். இமல்டா | மரிய[illegible] | கொழும்புத்துறை | " " |
| " | டொறின் | சாந்தினி | கொடிகாமம் | " " |
| " | சுகி | துஸ்யந்தி | நீர்வேலி | " " |
| " | கெலன் | அனுசியா | காரைநகர் | " " |
| " | சுரபி | மஞ்சுளாதேவி | திருநகர் | " " |
| 22/03/88 | லெப். துர்க்கா | கமலாதேவி | புதுக்குடியிருப்பு | விசுவமடு முகாம் சுற்றிவளைப்பில் |
| 03/07/88 | லெப். மரியா | புவனேந்திரஜோதி | வட்டுக்கோட்டை | விசுவமடு நேரடி மோதலில் |
| " | இராதை | விக்கினேஸ்வரி | நீர்வேலி | அலம்பில் செல் தாக்குதலில் |
| 04/07/88 | 2ஆம் லெப். ஆனந்தி | காமாட்சியம்மா | பரப்புக்கடந்தான் | " " |
| 21/11/88 | லெப். அனிதா | | மட்டக்களப்பு | களுவாஞ்சிக்குடி சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு. |

**இவர்களுக்கு எமது வீரவணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**நன்றி**

**(சுதந்திரப்பறவைகள்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லெப். மரியா

தமிழர்களின் தேசிய விடுதலைப் போர் படிப்படியாகவளர்ந்த போது தமிழ்ப் பெண்கள் தமக்கெதிரானஇன, சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராக விழிப்படையத் தொடங்கினர்.

இந்த வகையில் வட்டுக் கோட்டையைச் சேர்ந்தபுவனேந்திரஜோதியும் சிந்தித்தாள். நாம் ஒரு இனத்தின்தேசியரீதியில்மட்டுமல்ல சமூக ரீதியில் ஒடுக்கப் படுவதனைக்கண்டாள். தொடர்ந்து நடந்த இனக் கலவரங்களால்பெண்களது கல்வி பெருமளவு பாதிப்பிற்குள்ளாகி இருந்தது. இராணுவக் கொடுமைகள் பெண்கள் மீது அளவிற்கதிகமாயிற்று. அவள், தான்எந்த வகையிலாவது எம் இனத்தின் பூரண விடிவிற்காக பங்காற்ற வேண்டும் எனத் தீர்மானித்தாள்.

1984 இல் தமிழீழத்திற்காக பல விடுதலை அமைப்புக்கள் போராடுவதாக பறை சாற்றிக் கொண்டிருந்தவேளை நிதானம் இழக்காது சிந்தித்துச் செயல் பட்டாள். தனது விடுதலை வேட்கையினை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் தெரிவித்தாள், தன்னையும் இணைத்தாள்.

1985 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் தனித்தனியேதமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பங்கேற்றுக் கொண்டிருந்த மகளிர் அனைவரும் ஒரு அமைப்பாக ஒன்று சேர்ந்தனர். அன்று முதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர்அமைப்பு இரகசியமாக இயங்க ஆரம்பித்தது. அதில் 'ஜான்சி' ஆக தன் பங்களிப்பை மேற்கொள்ள ஆரம்பித்தவள், தினமும் மக்களின் போராட்டப் பங்களிப்புக்களை வளர்க்க அரும்பாடு பட்டாள். புதிதாக போராளிகளை உருவாக்குதல், மக்களுக்கு அரசியல் தெளிவூட்டல், வருங்கால சந்ததியினை முற்போக்கு சிந்தனையும் சுதந்திர உணர்வும் மிக்கவர்களாக வளர்க்க பாலர் பாடசாலைகளை உருவாக்குதல், வீட்டினுள் முடங்கியிருந்து 'தம்மை' மட்டும் சிந்தித்து சிறு வட்டத்திற்குள் இருந்த பெண்களை கூட்டு முயற்சிகளானசிறு கைத் தொழில், தையல், முதலுதவி நிலையம், பண்ணை வேலைகள் ஆகியவற்றில் ஈடுபட வைத்து அவர்களை திறம்பட வழி நடத்தினள்.

www.tamilarangam.net

பேச்சிலே மட்டும் அல்ல, எழுத்துக்கள் மூலமும் மக்களைச் சிந்திக்க வைக்க 'சுதந்திரப் பறவைகள்' எனும்நூலில் தனது கருத்துக்களை மக்களுக்கு புரியும்படி எளிமையாக எடுத்துரைத்தாள். மக்கள் போராட்டங்களானஊர்வலம், மறியல் போராட்டம், கர்த்தால் மக்களைப் பங்களிக்க- வைப்பதில் இவள் பெரும் பங்கேற்றாள்.

1987 ஆம் ஆண்டு ஆயுதப் பயிற்சி எடுக்க முன்பு சிறி லங்கா அரசின் கூலிப்படைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டினை மீறி வெளியேற மறுப்பட்ட போது இராணுவ முகாமினைச் சுற்றி காவல் நிற்க இவள் தவறவில்லை.

ஆயுதங்கள் மூலம் அப்பாவித் தமிழ் மக்களை அழிக்கும் இராணுவத்தை எதிர்க்க ஆயுதம் ஏந்தத் துடித்தாள். ஆயுதம் பயிற்சியில் 1987 ல் தன்னை ஈடுபடுத்தினாள். பயிற்சி முகாமில் முதல் முதல் துப்பாக்கி குறி பார்த்தலில் முதல் இடத்தினைப் பெற்றாள். இவள் கையில் ஆயுதம் தவழ்ந்து விளையாடியது. எதிரிகளை ஆயுதத்தால் அழிக்கத் துடித்தவள், பயிற்சியின் பின்பு மீண்டும் 'மரியா'வாக மக்களை அணிதிரட்டுவதிலும் பங்கேற்றாள். வட்டுக் கோட்டை மகளிர் அமைப்புப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய இவள், மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்த தியாகி லெப் கேர்ணல் திலீபனின்உண்ணாவிரதத்தில் மக்களது பங்களிப்பினை முழுமை பெறச் செய்தாள்.

10/10/87 அன்று வல்லரசான இந்தியாவின் கூலிப் படைகளுடன் போரிட ஆரம்பித்த விடுதலைப் புலிகளுள் மரியாவும் முன்நின்றாள். தொழில் நுட்பக் கல்லூரியில், மானிப்பாய், வட்டுக் கோட்டை, அளவெட்டி ஆகிய இடங்களில் இவள் பாதங்கள் சளைக்காது தடங்கள் பதித்தன. அவளது தடங்கள் பதிந்த இடமெங்கும் அவளது குறியில் பல ஆக்கிரமிப்பாளர்களின் உடல்கள் விழுந்தன.

இவள் மக்களுடன் மட்டும் இனிமையாகப் பழகவில்லை. சக போராளிகளுடனும் அன்பாகப் பழகினாள். குழு ஒன்றின் பொறுப்பாளராக இருந்த இவள் சக போராளிகளின் - தேவைகளை தாயாகவும், தலைவியாகவும் பூர்த்தி செய்தாள். நன்கு கைவேலைகள் செய்யும் இவள் சக போராளிகளின் வேடிக்கைப் பேச்சுக்களுக்கு நகைச்சுவையாகவும் பதிலளித்து அனைவரையும் சிரிக்க வைப்பாள்.

விசுவமடுவில் 1988 ஆம் ஆண்டு ஆடி 3 ஆம் நாள் எம்மவர்களால் திட்டமிட்டு இந்திய இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, பெண்களே தலைமை தாங்கி நடத்திய ஒரு தாக்குதலில் இவளும் பங்கேற்றாள். எதிரியுடன் நடந்த நேரடி மோதலில் இவள் வீரமரணமடைந்- தாள்.

(நன்றி சுதந்திரப்பறவைகள்)

www.tamilarangam.net



# தமிழீழ செய்திகள்

* கடந்த 1/06/89முதல் 29/06/89 வரைப்பட்ட காலப் பகுதியில் 51 விடுதலைப் போராளிகள் தமது இலட்சிய உலக வாழ்வினை அர்ப்பணித்துள்ளனர் 51 இளைய சுதந்திர வேங்கைகளின் இவ் உயர் உயிர்தியாகம் தமிழீழம் தன் தேசவரலாறு பூராவும் தாங்கி நிற்கும். அவ் 51 விடுதலை வேங்கைகளின் முன் தலை சாய்கின்றோம்

* கடந்த 01/06/89 முதல் 29/06/89 வரைப்பட்ட காலப் பகுதியில் 93 இந்தியப் படையினர் விடுதலைப் போராளிகளால் அழிக்கப் பட்டனர்..நவீனரக குவிக்கப்பட்ட அடக்குமுறை இந்திய இராணுவ இயந்திரம் மீது விடுதலைப் புலிகள் தொடுக்கும் அதிரடி நடவடிக்கைகள் வளர்ந்துவரும் போராட்ட நடவடிக்கைகளை சுட்டி நிற்கின்றன என சர்வதேச செய்தி நிறுவனங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. இக் காலப் பகுதியில் L.M.G-4, RPG-1 ரைபிள்கள்-30, SMG-08, பிஸ்ரல்-01, என்பன உட்பட பலரக இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

* இந்தியப் படைகள் வெளியேறியே ஆகவேண்டுமென இந்திய பிரதான எதிர்க் கட்சியான வீ.பி.சிங் தலைமை தாங்கும் தேசிய முன்னணி, பாரதீய ஜனதா கட்சி பார்வேட் பிளாக், கம்யூனிஸ் கட்சி, மாக்சிஸ் கம்யூனிஸ் கட்சி உட்பட பல தேசிய -பிராந்தியக் கட்சிகள் கோரியுள்ளன. இந்தியன் எக்ஸ்பிரஸ், முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் பத்திரிகைத் துறைச் செயலாளர்திரு டக்கீர், பத்திரிகையாளர் குல்தீப் நாயர் என்போர் உட்பட பல பத்திரிகைகள் இந்தியப் படைகள் வெளியேற வேண்டுமெனக் கோரியுள்ளன. அமெரிக்கத் தூண்டுதவின் பேரில்த்தான் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழீழக் கோரிக்கையை நசுக்க ஈழத்திற்கு படைகளை அனுப்பினார் என வீ.பி.சிங் குற்றம் சாட்டியுள்ளார். ஆயிரக் கணக்கான இந்தியப்படைகள் கொல்லப் பட்டதற்கு விளக்கம் தேவை என பாரதீய ஜனதாக் கட்சி கோரியுள்ளது. சிறீலங்காப் பகுதிகளில் இந்தியப் படைகள்வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை ஆளும் ஐக்கிய தேசி

www.tamilarangam.net



யக்கட்சி, சுதந்திரக் கட்சி, இலங்கை சமசமாசக் கட்சி நவ சமசமாசக் கட்சி, சிறீலங்கா மக்கள் கட்சி உட்பட பல்வேறு அமைப்புக்களும் விடுத்துள்ளன.

விடுதலைப் புலிகள் முன் வைத்த "இந்தியப் படைகளே வெளியேறு" என்ற கோசம் இன்று தென் ஆசியப் பிராந்திய வயப்பட்டு வருகின்றது.

* சென்னையில் ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் கட்சியாலும், அதனது ஆதரவாளர்களாலும் நடாத்தப் பட்ட "இந்தியப்படைகள் ஈழத்தில் தொடர்ந்து இருந்து ஆக்கிரமிப்பு செய்யவேண்டும்" எனக்கோரிய பொதுக்கூட்டத்தில் உணர்வுமிக்க தமிழக நண்பர்கள் பலர் கலந்து கொண்டு கேள்விகளை எழுப்பினர். சிறப்புமிக்க கவிஞர் மேத்தா, புலவர் பெருங்கவிக்கோ சேதுராமன், பேராசிரியர் சுபவீரபாண்டியன் உட்பட பல மனித நேயம் மிக்க தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் கூற முடியாத துக்ளக்"சோ", பண்டிருட்டி ராமச்சந்திரன் போலிஇடதுசாரி ஜெயகாந்தன், சுப்பு போன்றோர் வன்முறைகள் மூலம் அத்தோழர்களை காயப்படுத்தினர் "உங்கள் வீட்டுப்பெண்களை கற்பழிக்க வேண்டும்" எனப்போலி இடதுசாரி ஜெயகாந்தன் தனது வக்கிர உணர்வைவெளிக் காட்டினர்.

* தென்ஆசிய பிராந்திய மகாநாடான "சார்க்" மாநாடானது இந்திய தொடர்பான சிறீலங்காவின் எதிர்ப்பால் ஒரும் குழப்பமான சூழ்நிலை அடைந்துள்ளது.

## அமைதி ஜனநாயகம்?

* இந்தியப் படைகளினதும்–அதனது வளர்ப்புப் பிராணிகளினதும் பயங்கரவாதம் படுகொலைகளாகவும், இன்னம் பிற வழிகளிலும் தொடர்ந்து வருகின்றன. கடந்த யூன்" மாதத்தில் மட்டும் சுமார் ஐம்பது வயது முதிர்ந்த தமிழ் பொது மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த காரணத்தினில் ஈ.பி.ஆர்.எல்.எப் பயங்கரவாதிகளால் இழுத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர் முன்னாள் பிரஜைகள்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சமூகப் பிரமுகர்கள் ஆகியோர் இதனில் அடங்குவர். மேலும் 1987 அக்டோபர் முதல் 1989 ஆடி வரை சுமார் 5400 பொதுமக்கள் இந்தியப்படைகளாலும் [illegible]

www.tamilarangam.net



ENDLF, TELO பயங்கரவாதிகளாலும்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சுமார் 7 வைத்திய சாலைகள் 25 பாடசாலைகள், என்பன இப்பயங்கர வாதிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு லட்சம் மக்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சுமார் 3000இளைஞர்கள்–யுவதிகள் பல்வேறு இந்தியப்படை முகாம்களிலும் கைதுசெய் துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். (இவற்றில் அண்மைய கைதுகளின் விபரங்கள் இடம்பெற வில்லை.)

* இந்தியப் படைகள் வெளியேறக் கூடாதெனக் கோரி பலாத்காரமாக ஊர்வலங்களை நடாத்த இந்திய அரசின் வளர்ப்புப் பிராணிகள் தமது இந்திய விசுவாசத்தைவெளிக் காட்டி வருகின்றன. இந்தியப் படைகளின் உதவியுடன் வீடுகளுக்குச் சென்று மக்களது அடையாள அட்டைகளைப்பறித் துக் கொண்டு அவர்களைத் தாம் குறிப்பிட்ட இடத்தில்கூடுமாறு இந்திய வளர்ப்புப் பிராணிகள் (ஈ.பி.ஆர்.எல். எவ், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ்) கட்டளையிடும். பலாத்காரத்தின் பேரில் அவ்வாறு கூடும் மக்கள் மத்தியில் "பெருமாள்" கூட்டம் போடும். இந்தியப் படைகளை நிற்குமாறு அழுகுரல் எழும்பும். தொடர்ந்து அன்றைய பத்திரிகைகளும் – இந்திய வானொலியும் மக்கள் இந்திய படைகளை வெளியேற வேண்டாம் என கோஉஷித்து ஊர் வலம் நடாத்தியதாக அறிக்கைகளும் செய்திகளும் இந்திய இராணுவத்தால் வெளியிடப்படும்.

* சுமார் ஐயாயிரம் தமிழ் இளைஞர்களும் –யுவதிகளும் கடந்த இரு வாரங்களில் (ஆனி மாதப் பிற்பகுதியில்) இந்தியப் படைகளாலும் –அதனது வளர்ப்புப் பிராணிக ளான ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ கும்பல்களாலும் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப் பட்டுள்ளனர். இவ் இளைஞர்களும் யுவதிகளும் பலாத்காரமானமுறையில் உருவாக்கப்படும் சீ.வி.எவ் எனப்படும் கூலிப் படைக்கு பயன்படுத்தப் படுவர் என அவதானிக்கப் படுகிறது. வீதிகளில் உள்ள தடை முகாம்கள் ஊடாகவும், இரயில் பாதைத் தடை முகாம்களுக்கூடாகவும் பயணம் செய்யும் இளைஞர்கள் பலர் இக் கைதுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் தமிழீழப் பகுதிகளிலிருந்து தப்பி ஓடும் இளைஞர்கள் பலாலியூடாக விமானம் மூலம் கொழும்பு செல்லஎத் தனிக்கின்றனர். எனினும் அங்கும் கைதுகள் இடம் பெறுகின்

www.tamilarangam.net



றன. இவ்வாறான பயங்கரவாதத்திலிருந்து தப்பி ஓடி வரும் இளைஞர்களை பராமரிப்பது தொடர்பாக விடு தலைப் புலிகள் ஆலோசனை நடாத்தி வருகின்றனர். (இது இந்திய உளவுப் படையான "றோ"வின் திட்டமிட்ட நடவடிக்கை என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் பகி ரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளனர்)

ஆயுத ஒப்படைப்பிற்குப் பின்

* தமிழீழப்பகுதிகள் எங்கும் சுமார் 54 EROS உறுப்பினர்கள் EPRLF, ENDLF, TELO குழுக்களினால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12/06/89 அன்று வவுனியாப் பகுதியில் வைத்து 06 EROS உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதுதொ டர்பாக EROS விடுத்த அறிக்கையில்- இந்திய இராணு வத்தினது முகாமிற்கு விசாரணைக்காக சென்ற 6 பேருமே கொலையுண்டவர் ஆவர்..

ஜனநாயகம் பற்றியும், புனர் வாழ்வு பற்றியும், வடக்கு-கிழக்கு பாதுகாப்பு பற்றியும், அமைதி சமாதானம் பற் றியும் பெரிதும் முழங்கும் சக்திகளே இக் கொலைகளை திரை மறைவில் செய்துள்ளன என EPRLF பயங்கரவாதிக ளின் கோரச் செயல் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

சாத்தானின் வேதம் * சாத்தானின் வேதம் * சாத்தானின் வே

* சாத்தானின் வேதம் *

"வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாணவர்கள் ஆசிரியர்கள், அறிஞர்கள் போன்றோர் மர்மமானமு றையில் கொலை செய்யப்படுவதை ஈ.பி.ஆர்.எல். எப் கண்டிக்கின்றது. அத்துடன் இப்படியான கோரச் செயலை நிறுத்துவதற்காக மக்கள் ஒன்று திரண்டு குரல் எழுப்ப வேண்டும்.

வ.பெருமாள்
(வ.கி.மா.ச.மு.அ)

சாத்தானின் வேதம் * சாத்தானின் வேதம் * சாத்தானின் வே

www.tamilarangam.net

www.tamilarangam.net



அக்கினிக் குஞ்சொன்று
கண்டேன் - அதை
ஆங்கிடைக் காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு;
தழல் வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்றும் உண்டோ?

வெளியீடு :-
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
341, RUE DES PYRENEES,
75020 PARIS .